# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.

தொலைபேசி : 044– 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண். 36/மா/2021**

**நாள் : 5.04.2022**

| | | |
|---|---|---|
| திரு. R.மேகநாதன்,<br>திருவள்ளூர் மாவட்டம். | – | முறையீட்டு மனுதாரர் |
| ஆணையர்,<br>ஆவடி மாநகராட்சி. | – | எதிர்மனுதாரர் |

திருவள்ளூர் மாவட்டம், செஞ்சி அஞ்சல், வேப்பஞ்செட்டி கிராமம், பிள்ளையார் கோவில் தெரு, எண்.1/80 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R.மேகநாதன் என்பவரின் 03.5.2021 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 7.5.2021-ல் பெறப்பட்டு, 36/மா/2021 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது

**ஆணை**

திருவள்ளூர் மாவட்டம், செஞ்சி அஞ்சல், வேப்பஞ்செட்டி கிராமம், பிள்ளையார் கோவில் தெரு, 1/80 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R.மேகநாதன் என்பவர் 03.5.2021 நாளிட்ட முறையீட்டு மனுவில் எல்லன் மகன் சிவலிங்கம் என்பவர் பெயரில் போலி பட்டாவின் அடிப்படையில் வழங்கப்பட்ட விதிமீறல் சொத்து வரிவிதிப்பை (012/002/00169-012/52034) ரத்து செய்ய கோரியுள்ளார். மேலும் அவர் பெயருக்கு பட்டா வழங்கப்படவில்லை. போலி பட்டாவை கொண்டு சொத்துவரி விதித்துள்ளனர். அதனை ரத்து செய்ய இம்முறைமன்ற நடுவத்தை கோரியுள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்பிடக் கோரி ஆணையர், ஆவடி மாநகராட்சிக்கு இம்முறைமன்ற நடுவத்தின் 17.6.2021 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டது.

மாநகராட்சி ஆணையர், ஆவடி மாநகராட்சி தனது 01.09.2021 நாளிட்ட கடிதத்தில், திரு. ஆர். மேகநாதன் என்பவர் எல்லன் மகன் சிவலிங்கம் பெயரில் போலி பட்டா அடிப்படையில் வழங்கப்பட்ட விதி மீறல் சொத்து வரிவிதிப்பு ரத்து செய்ய வேண்டும் என கோரப்பட்டுள்ளதற்கு உரிய பதில் வழங்காமல் திரு. ஆர். பாஸ்கர் த/பெ. இராமச்சந்திரன் என்பவரின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005-ன் கீழ் அளிக்கப்பட்ட மனு நாள்:04.03.2019-க்கு இம்மாநகராட்சியின் ந.க.எண்.2559/2019/அ2, நாள்:22.03.2019-ன் மூலம் பதில் அளிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திரு. ஆர். மேகநாதன் என்பவர் அளித்துள்ள கடிதத்தில் கேட்கப்பட்டுள்ள கேள்வியும், இம்மாநகராட்சியின் மூலம் வழங்கப்பட்டுள்ள பதிலும் இதற்கு பொருந்தும் என்று பதில் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரர் மற்றும் ஆணையர், ஆவடி மாநகராட்சி மற்றும் வருவாய் அலுவலர் ஆவடி மாநகராட்சி ஆகியோரை 16.2.2022 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 10.2.2022 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் 16.02.2022 அன்று நடைபெறவிருந்த விசாரணைக்கு ஆஜராகவில்லை. மறு தேதி வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளனர். முறையீட்டு மனுதாரர் 13.2.2022 நாளிட்ட தமது கடிதத்தில் தனக்கு தற்போது திருமணம் ஆகியுள்ளதால் விசாரணைக்கு ஆஜராக இயலவில்லை என தெரிவித்துள்ளார். ஆணையர், ஆவடி மாநகராட்சி அவர்கள் தனது 15.2.2022 நாளிட்ட கடிதத்தில் தற்போது நகர்புற உள்ளாட்சி தேர்தல் 2022 பணியில் தேர்தல் நடத்தும் அலுவலராக ஆணையரும், உதவி தேர்தல் நடத்தும் அலுவலராக வருவாய் அலுவலரும் தேர்தல் பணியில் ஈடுபட்டு வருவதால் மேற்படி விசாரணைக்கு மறு தேதி வழங்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை இம்முறைமன்ற நடுவ 21.2.2022 நாளிட்ட அழைப்பாணைகள் மூலம் 7.3.2022 அன்று நேரடி விசாரணைக்கு மீண்டும் அழைக்கப்பட்டனர்.

முறையீட்டு மனுதாரர் 7.3.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"திருவள்ளூர் மாவட்டம், ஆவடி வட்டம், மிட்டணமல்லி கிராமம் வார்டு A பிளாக் 39 சர்வே எண்.282/2A1B-ல் எல்லன் என்பவரின் மகன் திரு. சிவலிங்கம் என்பவர் மாநகராட்சிக்கு சொந்தமான பாதையை ஆக்கிரமித்து வீடுகளை கட்டியுள்ளார். போலி பட்டாவைக் கொண்டு மாநகராட்சியில் சொத்து வரி கேட்பினையும் பெற்றுள்ளார். சட்ட

விரோதமாக பெறப்பட்ட மேற்கண்ட சொத்து வரி கேட்பினை உடனே ரத்து செய்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்." எனத் தெரிவித்துள்ளார்.

ஆவடி மாநகராட்சி உதவி வருவாய் அலுவலர் 7.3.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"கடந்த 20 வருடங்களுக்கு முன்பு பட்டாவைக் கொண்டு சொத்து வரி விதிக்கப்பட்டுள்ளது. தற்போது சொத்து வரி, கிரையப் பத்திரத்தின் நகலினை பெற்று சொத்து வரி விதிக்கப்படுகிறது. தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திலிருந்து இந்நேர்வு தொடர்பாக அறிக்கை கோரப்பட்டதன் அடிப்படையில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள எல்லன் என்பவரின் மகன் திரு. சிவலிங்கம் என்பவரிடமிருந்து உரிய ஆவணங்களை பெற்று, அதனை ஆய்வு செய்து போலி ஆவணங்களைக் கொண்டு மேற்கண்ட சிவலிங்கம் என்பவர், சொத்து வரி கேட்பு பெற்றிருந்தால் அதனை 15 நாட்களுக்குள் ரத்து செய்கிறேன் என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

மனுதாரரின் புகார் மனு மற்றும் அவரது வாக்குமூலம் ஆவடி மாநகராட்சி உதவி வருவாய் அலுவலர் அவர்களின் வாக்குமூலம் ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

திரு. R. மேகநாதன் முறையீட்டு மனுதாரர் தனது மனுவில் திரு. எல்லன் என்பவரின் மகன் திரு. சிவலிங்கம் என்பவர் போலி பட்டாவைக் கொண்டு மாநகராட்சியில் சொத்துவரி கேட்பினை பெற்றுள்ளதால் அதனை இரத்து செய்ய புகார் அளித்துள்ளார்.

ஆவடி மாநகராட்சி ஆணையர் தனது 1.9.2021 நாளிட்ட கடிதத்தில் மனுதாரர் திரு. R. மேகநாதன் என்பவர் அளித்துள்ள கடிதத்தில் கேட்கப்பட்டுள்ள கேள்வியும் ஆவடி மாநகராட்சியின் மூலம் வழங்கப்பட்ட பதிலும் இதற்கு பொருந்தும் என்று ஒரு தவறான அறிக்கையை சமர்ப்பித்துள்ளார். திரு. R. மேகநாதன் அவர்களின் புகார் குறித்து இம்முறைமன்ற நடுவத்திற்கு ஒரு தெளிவான முழுமையான அறிக்கையை அனுப்பாமல் அலட்சியமாக இருந்துள்ளார். ஆணையாளரின் இச்செயலை இம்முறைமன்ற நடுவம் வன்மையாக கண்டிக்கிறது.

மனுதாரரின் மனு குறித்து ஆவடி மாநகராட்சி உதவி வருவாய் அலுவலர் "கடந்த 20 வருடங்களுக்கு முன்பு பட்டாவைக் கொண்டு சொத்து வரி விதிக்கப்பட்டுள்ளது. தற்போது சொத்து வரி, கிரையப் பத்திரத்தின் நகலினை பெற்று சொத்து வரி விதிக்கப்படுகிறது. மனுதாரர் குறிப்பிட்டுள்ள எல்லன் என்பவரின் மகன் திரு. சிவலிங்கம் என்பவரிடமிருந்து உரிய ஆவணங்களை பெற்று, அதனை ஆய்வு செய்து போலி ஆவணங்களைக்கொண்டு சொத்துவரி கேட்பு பெறப்பட்டிருந்தால் அதனை 15 நாட்களுக்குள் ரத்து செய்திட உரிய

நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார். மேலும் இந்நிகழ்வு தொடர்பாக கண்டறியப்பட்ட விவரங்களின் அடிப்படையில் கீழ்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

ஆவடி மாநகராட்சி உதவி வருவாய் அலுவலர் 7.3.2022 அன்றைய நேரடி விசாரணையின் போது தமது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு திரு.சிவலிங்கம் என்பவருக்கு சொத்து வரி விதிப்பு சம்பந்தமாக உரிய ஆவணங்களை குறிப்பிட்ட காலகெடுவுக்குள் சமர்ப்பிக்க உரிய அறிவிப்பினை வழங்கி, விசாரணை நடத்திடுமாறு தெரிவிக்கப்படுகிறது. அதில் போலி ஆவணங்களை கொண்டு எல்லன் மகன் சிவலிங்கம் என்பவர் சொத்துவரி கேட்பு பெற்றுள்ளது நிரூபணமானால் அந்த சொத்துவரி கேட்பினை உரிய சட்ட விதிகளுக்குட்பட்டு ரத்து செய்திட நடவடிக்கையினை மேற்கொள்ள ஆவடி மாநகராட்சி ஆணையாளரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மூன்று மாத காலத்தில் இந்த நடவடிக்கைகள் முடிக்கப்பட வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது.

2022 - ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 05-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. R.மேகநாதன்,
   த/பெ. ராகவன்,
   எண்.1/80, பிள்ளையார் கோவில் தெரு,
   வேப்பஞ்செட்டி கிராமம்,
   செஞ்சி அஞ்சல், திருவள்ளூர் மாவட்டம் – 631 203.
2. ஆணையர்,
   ஆவடி மாநகராட்சி,
   ஆவடி.
3. இணை இயக்குநர்,
   ஒருகிணைப்பாளர் (Nodal Officer),
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக.